கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவாரூரில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கவுள்ளதையொட்டி நேற்று (30.3.2026) சென்னை மெரினா கடற்கரையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் எ.வ. வேலு, அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆகியோர் உள்ளனர்.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவாரூரில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கவுள்ளதையொட்டி நேற்று (30.3.2026) சென்னை மெரினா கடற்கரையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆகியோர் உள்ளனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கியுள்ள

6 சட்டமன்றத் தொகுதி கூட்டணி வேட்பாளர்களை கடுமையாக உழைத்து வெற்றி பெறச் செய்வோம்!

மாவட்டச் செயல் வீரர்கள் கூட்டத்தில் முடிவு – தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம், மார்ச்.31-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கி உள்ள 6 - சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் கூட்டணி வேட்பாளர்களை கடுமையாக உழைத்து வெற்றி பெற செய்வோம் என மாவட்டச் செயல் வீரர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டவுள்ளதாக மாவட்ட தி.மு.க. செயலாளர் தா.மோ.அன்பரசன் கூறிவுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கியுள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சி களின் சார்பில் போட்டியிடும் தி.மு.க. கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் குன்றத்தூர் செங்குந்தர் திருமண மண்டபத்தில் நேற்று மாலை தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதிய லிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ. விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ரஃபி அகம்மது, பரிதி இளம்சுருதி, எஸ்.எம்.கே. அண்ணாதுரை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீ. தமிழ்மணி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆதிமாறன், க.அன்புச் செல்வன், ஜி.சி.அன்புச்செழியன்,

பகுதி செயலாளர்கள் என். சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், பெருங்களத்தூர் சேகர், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பொன்னாட், செம்பாக்கம் சுரேஷ்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர்,

ஏ.வந்தேமாதரம், ஆப்பூர் பி. சந்தானம், எம்.டி.லோகநாதன், திருமுடிவாக்கம் இ. மணி, கே.பி.ராஜன், நகரச் செயலாளர்கள் டி.பாபு, ஜெ. சண்முகம், எஸ்.நரேந்திரன், எஸ்.ஜபருல்லா, கோ.சத்திய மூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், ஆர்.சதீஷ்குமார், த.வினோத் குமார், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ்,

கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், கே.எத்திராஜ், க.தேவேந்திரன், ஆர். எஸ்.சங்கர், மா.கணேஷ்பாபு, இரா.பாஸ்கரன், சே.அருள் தேவி, மு.ரஞ்சன், செல்வகுமார், ஜிஜேந்திரன் ராமு,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், டி.கே.கமலகண்ணன், எல்.பிரபு, எஸ்.ஆல்பர்ட், ஜா.செந்தில்தேவராஜ், சசிகலா, டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ்கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், கே. ஆர்.ஆனந்தன், டி.எஸ்.எம். ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர்.ஆர். ஜெயராம்மார்த்தாண்டம், முகலிவாக்கம் தங்கம் வாட்ஸ், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: -

வருகிற 23.4.2026 அன்று நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் - அமோக வெற்றி பெற செய்வதற்காக,

நம்முடைய மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வட்ட - கிளை கழக செயலாளர்கள் - நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள் - கழகச் செயல்வீரர்கள் உள்ளிட்ட ஒட்டு மொத்த கழகத் தோழர்களும் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி தோழர்களுடன் ஒன்றிணைந்து, 6 சட்டமன்ற தொகுதிகளிலும் போட்டியிடும் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் அனைவரும் வெற்றி கொடி நாட்டிட - தேனீக்களை போல சுறுசுறுப்பாக தேர்தல் களப்பணி பணியாற்றி, இரவு - பகல் பாராமல் கடுமையாக உழைத்து, வீடு - வீடாகச் சென்று அனைவரும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு,

நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் முன்னெடுத்துள்ள வெல்வோம் 200 - படைப்போம் வரலாறு, ஸ்டாலின் தொடரட்டும் - தமிழ்நாடு வெல்லட்டும் என்ற முத்தான முழக்கங்களை கழகத்தினர் அனைவரும் மனதில் முன்னிறுத்தி,

நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் நம்முடைய தி.மு.கழகம் 7 -வது முறையாக வரலாற்று வெற்றியை பெற்று - திராவிட மாடல் நல்லாட்சி மீண்டும் தமிழ்நாட்டில் அமைந்திட,

நம்முடைய மாவட்டத்தில் உள்ள 28.ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வெற்றி வேட்பாளர் தா.மோ.அன்பரசன், 29.திருப்பெரும்புதூர் (தனி) சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வெற்றி வேட்பாளர் கு.செல்வப்பெருந்தகை அவர்களையும், 30.பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தே.மு.தி.க. வெற்றி வேட்பாளர் அனகை முருகேசன் அவர்களையும், 31.தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வெற்றி வேட்பாளர் டாக்டர் கிருத்திகா தேவி அவர்களையும், 32.செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வெற்றி வேட்பாளர் எம். கே.டி.கார்த்திக் அவர்களையும், 33.திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் விடுதலைச்சிறுத்தைகள் வெற்றி வேட்பாளர் பன்னீர்தாஸ் அவர்களையும், பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து,

நம்முடைய நெஞ்சம் நிறைந்த தலைவர் - தளபதி அவர்களின் பொற்பாதங்களில் வெற்றிக் கனியை சமர்ப்பிபோம் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஒரு மனதாக முடிவெடுக்கிறது.

2026 சட்டமன்றத் தேர்தலில் சிறப்பான முறையில் எதிர்கொண்டு, நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அமோக வெற்றி பெற செய்வதற்காக,

சட்டமன்றத் தொகுதி வாரியாக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்.

வருகிற 3 -ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆலந்தூர் தொகுதி செயல்வீரர்கள் கூட்டமும், மாலை 4.00 மணியளவில் திருப்பெரும்புதூர் தொகுதி செயல்வீரர்கள் கூட்டமும்,

4 -ஆம் தேதி சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் திருப்போரூர் தொகுதி செயல் வீரர்கள் கூட்டமும்,

5 -ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் பல்லாவரம் தொகுதி செயல்வீரர்கள் கூட்டமும், மாலை 4.00 மணியளவில் செங்கல்பட்டு தொகுதி செயல்வீரர்கள் கூட்டமும்

6 -ஆம் தேதி திங்கள் கிழமை மாலை 4.00 மணியளவில் தாம்பரம் தொகுதி செயல்வீரர்கள் கூட்டமும் நடைபெற உள்ளது என்றும்

இச்செயல்வீரர்கள் கூட்டங்களில் அந்தந்த சட்டமன்ற தொகுதிகளில் அடங்கிய பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்களில் உள்ள ஒட்டுமொத்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள் பங்கேற்கும் வகையில் முறையாக அழைப்பிதழை அச்சிட்டு அனைவருக்கும் தந்து

இக்கூட்டங்களில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கூட்டணி கட்சியினர் பங்கேற்கும் வகையில் மிகச் சிறப்பான முறையில் இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்திடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

"மாநில உரிமை காக்கும் எண்ணத்தால் இணைந்த கூட்டணி இது!"

வலைதளப் பதிவில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, மார்ச் 31-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று மாலை, சென்னை - அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் மற்றும் சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிடும் - தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடினார்.

அதனையடுத்து கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்ட வலைதளப்பதிவில், "மதச்சார்பின்மை போற்றி - மாநில உரிமை காக்கும் எண்ணத்தால் இணைந்த கூட்டணி இது!" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

கழகத் தலைவர் அவர்களின் வலைதளப்பதிவு வருமாறு:-

நாங்கள் எண்ணிக்கையால் அமைந்த கூட்டணி அல்ல; மதச்சார்பின்மை போற்றி மாநில உரிமை காக்கும் எண்ணத்தால் இணைந்த கூட்டணி! தமிழ்நாடு இதுவரை காணாத மாபெரும் வெற்றி பெறப் போகும் நம் "மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி" கட்சித் தலைவர்கள் சொல்கிறோம்...

"வெல்வோம் ஒன்றாக!"

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

பிரம்மாண்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டம்

கரூர் - ராயனூரில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் – மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி வேண்டுகோள்!

கரூர், மார்ச். 31

கழக வேட்பாளர்களை ஆதரித்து நாளை கரூர் ராயனூரில் பிரம்மாண்ட பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது. கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுச்சி உரையாற்றுகிறார்கள். கூட்டத்தில் திரளாக பங்கேற்பது என மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கரூர் மாவட்ட செயற்குழு கூட்டம் கரூர் மாவட்டக் கழக அலுவலகம், (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கத்தில் மாவட்ட அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி சிறப்புரையாற்றி னார்.

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவிராஜா, தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயக்குமார்,

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க. சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர், கரூர் மேற்கு பகுதி செயலாளர் தாரணி பி.சரவணன், மாவட்ட துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பொருளாளர் பி.வி.பரத், தலைமை

செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, வி.கே.டி. ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார், கரூர் மாநகர செயலாளர் எஸ்.பி. கனகராஜ், பகுதி கழக செயலாளர்கள் க.சுப்பிரமணியன், ஆர்.எஸ்.ராஜா, ஆர்.ஜோதிபாக, வி.ஜி.எஸ்.குமார், எம். பாண்டியன்,

ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.எஸ்.மணியன், என். மணிகண்டன், கே.கருணாநிதி, த.கார்த்திக், சி.வளர்மதி, வி.கே.வேலுச்சாமி, ப.முத்துக்குமார், எம்.ரகுநாதன், கே. பாஸ்கரன், கே.ரவிராஜா, எம்.ராமலிங்கம், கே. வீராசாமி (எ) சுதாகர், என்.செல்வராஜ், சி.கதிரவன், எல்.கரிகாலன், குளித்தலை அ. சந்திரன், ப.தியாகராஜன், இ.ராமர் முன்னாள் எம்எல்ஏ, ஜி.அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர கழக பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர கழக செயலாளர் ஏ.குணசேகரன், பேரூர் கழக செயலாளர்கள் க.முரளிராஜா, கா.அம்மையப்பன், சி.தங்கராஜ், எம்.சசிக்குமார், ஆர். மோகன்ராஜ், இ.ரவீந்திரன், எம்.முத்து (எ) சுப்பிரமணி முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

வருகின்ற 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி அவர்களுக்கு வாய்ப்பு வழங்கிய கழகத் தலைவர், திராவிட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

கரூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக ஆசி எம். தியாகராஜன், அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக .சி. கே.ராஜா, குளித்தலை சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக சூரியனூர் அ.சந்திரன் அவர்களையும் அறிவித்து உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வாய்ப்பு வழங்கிய கழகத் தலைவர், திராவிட நாயகர் முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

கழகத்தின் தலைவர், திராவிட மாடல் அரசின் திட்டங்களைக் செயல்படுத்தி, தன்னிகரில்லா தலைவராக எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையை உருவாக்கியும், கரூர் மாவட்டத்திற்கு ரூ.5000 கோடி வளர்ச்சி திட்டங்களை வழங்கிய கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு கோடான கோடி நன்றியினையும், கரூர் மாவட்ட த்தில் உள்ள கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராய புரம், குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளில் உள்ள மக்கள் உறுதுணையாக இருப்பதை உறுதி செய்திடும் வகையில் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் பெருவாரியான வாக்குகளை பெற்று மகத்தான வெற்றியை தளபதி அவர்களின் பொற்கரங்களிலும், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களிலும் வழங்கிட வேண்டுமென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

வருகின்ற 1.04.2026 அன்று மாலை 5.00 மணிக்கு கரூர் ராயனூர், தளபதி திடலில், திராவிட மாடலென, திக்கெட்டு திசையும் வியக்க ஆட்சிபுரியும், சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம், சுயமரியாதை காத்திடும் மாபெரும் மக்கள் பேரியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், திராவிட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், கரூர் மாவட்டத்தில் உள்ள கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் உதயசூரியன் சின்னத்தில் கழக வேட்பாளர்களை ஆதரித்து நடைபெறும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் எழுச்சியுரையாற்ற உள்ளார்கள்.

இப்பொதுக்கூட்டத்தில் கரூர் மாவட்டக் கழகம், மாநகர, பகுதி, நகரம், ஒன்றிய, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர, பகுதி, நகரம், ஒன்றிய, பேரூர், வட்ட,வார்டு, கிளைக் கழகங்களின் சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள 1111 வாக்குச்சாவடிகளில் இருந்து BLA2, BLC, BDA, வெல்லும் தமிழ் பெண்கள், இளைஞர் படையினர் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் திரளாக கலந்துகொள்வது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாட்டில் வேட்பு மனுத் தாக்கல் தொடங்கியது!

சென்னை, மார்ச் 31-

மொத்தம் 234 தொகுதிகளைக் கொண்ட தமிழ் நாடு சட்டப்பேரவைக்கு வருகிற ஏப்ரல் 23-ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. இத்தேர்தலில் 5 கோடியே 73 லட்சம் பேர் வாக்களிக்க உள்ளனர்.

இந்நிலையில், தமிழ்நாடு முழுவதும் உள்ள 234 தொகுதிகளிலும் வேட்பு மனு தாக்கல் தொடங்கியுள்ளது. பல்வேறு தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்து வருகின்றனர்.

வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை ஏப்ரல் 7ம் தேதி நடைபெறுகிறது. வேட்பு மனுக்களை திரும்பப் பெற ஏப்ரல் 9ம் தேதி கடைசி நாள். ஏப்ரல் 23ம் தேதி வாக்குப் பதிவு நடைபெறும் நிலையில், மே 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

அனைத்து தொகுதிகளிலும் காலை 11 முதல் மாலை 3 மணி வரை வேட்புமனு தாக்கல் நடைபெறும். ஏப்ரல் 6ம் தேதி வரை மனுதாக்கல் செய்யலாம். மார்ச் 31 மகாவீர் ஜெயந்தி, ஏப்ரல் 1 வங்கி விடுமுறை, ஏப்ரல் 3 புனித வெள்ளி, ஏப்ரல் 5 ஞாயிற்றுக்கிழமை என 4 நாட்கள் விடுமுறை என்பதால், மீதியுள்ள 4 நாட்கள் மட்டுமே மனு தாக்கல் செய்ய அவகாசம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

போடிநாயக்கனூர் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளராகப் போட்டியிடும் ஓ.பன்னீர்செல்வம் நேற்று (30.3.2026) போடி நகரில் உள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பசும்பொன் தேவர், வீரபாண்டிய கட்டபொம்மன், எம்ஜிஆர் உள்ளிட்ட 12 தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியபின் பிரச்சாரத்தை தொடங்கினார். பெண்கள், பொதுமக்கள் திரண்டு வெற்றி வாழ்த்துக் கூறினர். இதில் மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி., மற்றும் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சியினர் கலந்து கொண்டனர்.